# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 02 வெள்ளிக்கிழமை (18-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 252


# இன்றும் நாளையும் அமைதிபேணுவதாக புலிகள் அறிவிப்பு!

## அரசின் பதில் இன்னுமில்லை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 18

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வுகள் நாளை நடைபெறுவதை யொட்டி இன்றும், நாளையும் தாக்குதல்கள் இல்லாமல் அமைதி பேணுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான கடிதத்தை விடுதலைப் புலிகள் யுனிசெவ் அமைப்பின் கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளனர் என்றும்- அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறியும் பொருட்டு இந்தக் கடிதம் யுனிசெவ் அமைப்பினால் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும்- யுனிசெவ் அமைப்பின் யாழ். அலுவலக திட்ட அதிகாரி திருமதி பெனிபுறானி தெரிவித்தார்.

எனினும் இதுதொடர்பான அரசாங்கத்தின் அறிவிப்பு நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப யாழ்ப்பாணம் நல்லாய் ''முன்னேறிட்டுது'' எண்டு சொல்லுங்கோ...!

## படையினர் - புலிகள் மோதலில் பலி

கொழும்பு, செப். 18

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அம்பகாமம், குஞ்சுக்குளம் பகுதிகளில் கடந்த இருநாள்களில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 2 படையினர் உயிரிழந்தனர்; 5 பேர் காயமடைந்தனர்.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய இராணுவப் பேச்சாளர் சுனில் தென்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை ஊழியர்கள் தொடர்ந்து விசாரணை!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். மாநகரசபை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் கொழும்பில் இருந்து வந்த விசேட பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் யாழ். மாநகரசபை ஊழியர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

நேற்றும் ஒரு பகுதி ஊழியர்கள் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

இதுவரை சுமார் 25 ஊழியர்கள் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேலும் பல ஊழியர்கள் மீது இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

மாநகரசபை ஊழியர் கையொப்பப் பதிவேடு நேற்றுப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்டுச் சோதனை செய்யப்பட்டதுடன் குண்டு வெடிப்பு நடந்த நாளில் கடமைக்குச் சமுகமளித்தோர் விவரங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவையில் தடங்கல் ஏற்படக் கூடாது

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கோரிக்கை

''பொதுமக்களுக்கான விமானப் போக்குவரத்துச் சேவை எந்தவித இடையூறுமில்லாமல் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.''

மேற்கண்டவாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கோரியுள்ளது.

கொழும்புக்கும்- யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான சேவை தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணமக்கள் வெளி உலகத்துடன் தொடர்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் சிறுவன் மரணம்

நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை வந்து சேர்ந்த லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்த சிறுவன் ஒருவர் கப்பலுக்குள் மரணமானார்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த செல்வரட்ணம் தினேஷ் (வயது 5) என்பவரே மரணமானவராவார்.

திருமலை கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தங்கியிருந்த போது இந்தச் சிறுவனுக்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறுவனுடைய சடலத்தை காங்கேசன்துறைப் பொலீஸார் நேற்றுப் பிற்பகல் 4-45 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-7)

## மாநகரசபைக் கூரையில் குண்டு முதல் நாளே பொருத்தப்பட்டது

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, செப். 18

யாழ். மேயர், நகரத் தளபதி உட்பட 12 பேரின் உயிர்களைப் பலி கொண்ட குண்டு அது வெடிக்க வைப்பதற்கு முதல் நாளே கூரையில் பொருத்தப் பட்டிருக்கிறது.

பூர்வாங்க விசாரணைகள் மூலம் இந்த விவரம் தெரிய வந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநகரசபையில் வெடித்த குண்டு 10 கிலோ கிராம் எடை கொண்டது. ஐந்து தனித்தனிக் கட்டிகளாகத் தயாரிக்கப்பட்டு ஒன்றாகப் பொருத்தப்பட்டுள்ளது. 10X20 அங்குலம் அளவுடைய அக் குண்டு நேரக்கணிப்பு மூலம் அல்லது ரிமோட் கொன்ட்ரோல் முறை மூலம் வெடிக்க வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது என்றும் அவர் சொன்னார்.

(ஐ)

## சிறுமியரின் நகைகளை அபகரித்த யுவதிகள்!

### நகரில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 18

ரியூஷனுக்குச்சென்று கொண்டிருந்த மூன்று சிறுமிகளிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்ட துணிகரச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணி அளவில் யாழ். அன்னசத்திரம் வீதியில் இடம்பெற்றது.

அதுவும் இச்சிறுமிகளை பின் தொடர்ந்து வந்த மூன்று யுவதிகளே கத்தியைக் காட்டி சிறுமிகளைப் பயமுறுத்தி விட்டு நகைகளை அபகரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணங்கள், கோவைகள் அகற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 18

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த யாழ். மாநகர சபை கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த ஆவணங்கள், மற்றும் அலுவலக கோவைகள் நேற்று மாநகர சபை ஊழியர்களினால் எடுக்கப்பட்டு நல்லூர் பண்டார மாளிகையிலுள்ள மாநகர சபை காரியாலத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்த ஆவணங்களை மீட்பதற்கு கடந்த சில நாள்களாக படையினரின் அனுமதி கிடைக்கவில்லை. நேற்று முன்தினம் வடபகுதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 3 எம். பிக்கள் விவகாரம்

## நேற்றைய மாநாட்டில் காரசாரமான விவாதம்!

கொழும்பு, செப். 18

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நேற்றுக் கூட்டிய மாநாட்டில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

நேற்று மாலைஇடம்பெற்ற இம்மாநாட்டில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவும், அக்கட்சியின் இரு நாடாளுமன்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையின் எதிர்காலம் குறித்து எந்தச் சிக்கலும் இல்லை

### செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ்

கொழும்பு, செப். 18

யாழ். மாநகர சபையின் எதிர்காலம் குறித்து எவ்வித ஐயங்களோ, சிக்கல்களோ இருப்பதாகத் தெரியவில்லை என்று நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மாநகர சபையின் எதிர்காலம் குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேள்விகளைத் தொடுத்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இன்று முதல் குதூகல ஆரம்பம்
சத்தியராஜ் ( இரு வேடம் ), கஸ்தூரி
சுஜாதா நடித்த

### அமைதிப் படை

காட்சிகள்:- 10-30, 2-00, 5-00
( புதிய நேரம் )

(சி/4919)

## ரீகல் டாக்கீஸ்

ஈச்சமோட்டை.

40 அடி அகலத் திரையில்
இதுவரையும் நீங்கள் பார்த்திராத தெளிவான முறையில்
ஸ்ரீறியோ போனிக்ஸ் சவுண்டுடன்
பெண்களுக்கென பொக்ஸ் சீட்டுடன்
காணத் தவறாதீர்கள்! நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த திரை ஓவியம் தான்
மம்முட்டி, சுமன், நக்மா, நாசர் நடித்த

### பிரதிநிதி

( புதிய பிரதி )

காட்சிகள்:- 10-30, 2 30, 5-30 (புதிய நேரம்)
அடுத்த வெளியீடு:- 20 - 09 - 98 முதல்
M. G. R. இன் உலகம் சுற்றும் வாலிபன்
2-30 மணிக்கு

(59287)

வட பிராந்திய

## வை. எம். சீ. ஏக்களின் சபை

நடத்தும்

### கருத்தரங்கு

பொருள்: "Theological Imperatives"
அவசரமாக அணுகவேண்டிய அறப்பணி
இடம்: கிறிஸ்தவ இறையியல் கழகம்,
மருதனார்மடம.
காலம்: 18 - 20 - Sep. - 1998

மேலதிக விவரங்களுக்கு கிளைக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

காரியதரிசி,
வடபிராந்திய வை.எம் சீ.ஏக்களின் சபை.

உடுவில் வீதி,
சுன்னாகம். (59280)

## மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 6-11 வரைக்குமான பரீட்சை
ஆரம்பம 20.09.98 ஞாயிறு காலை 8-00 மணி
★ பதிவு செய்த நிறுவனங்கள் முன் கூட்டியே வினாத் தாள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம்
(59285) பரீட்சைப்பகுதி

## NEWTON STUDIES CENTRE

342, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
CHEMISTRY — Mr. அன்பழகன்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 19 - 9 - 98

| | Sat., Sun. | |
|---|---|---|
| INORGANIC | 3 – 4 | P.M. |
| PHYSICAL | 4 – 5 | ,, |
| PAPER CLASS | 5 – 6 | ,, |

(59234)

## கண்ணீர் அஞ்சலி

### திரு. சரவணை மாணிக்கவாசகர்

(ருூபி போட்டோ உரிமையாளர்)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சரவணாஸ் (பாட்டா)
உரிமையாளரும், ஊழியர்களும்.

83, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (59277)

## சாகித்திய பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், செப் 18
1998 ஆம் ஆண்டில் சாகித்திய பரிசு பெறும் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்' என்ற சிறுகதைக்காக கோகிலா மகேந்திரனும், 'துன்பக்கேணியிலே' என்ற நாவலுக்காக செ. யோகநாதனும், 'சில்லையூர் செல்வராஜன் கவிதைகள் பகுதி 1' என்ற கவிதைக்காக சில்லையூர் செல்வராஜனும், 'பாடுபடுவோம்' என்ற குழந்தைகள் இலக்கியத்துக்காக ரி. துரைசிங்கமும் 'சின்னச் சின்ன பூக்கள்' என்ற குழந்தைகள் இலக்கியத்துக்காக வாகரை வாணனும், 'பரிசு பெற்ற நாடகங்கள்' நாடகத்துக்காக எஸ். செபமாலையும், 'இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்' என்ற ஆய்வுக்காக பேராசிரியர் கே. அருணாசலமும், 'இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூகப் பண்பாட்டியல் ஆய்வுக்காக எம். எஸ். எம். அனஸ்ஸும் சாகித்திய பரிசு பெற உள்ளனர்.

இவர்களுக்கான விருது வழங்கலும் பொற்கிளி வழங்கல் நிகழ்வும் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ளது. (இ-8)

## முகமாலை உற்சவம்

முகமாலை புனித ஆரோக்கிய அன்னை திருவிழா நாளை மாலை 4. 30 மணிககு நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

நாளை மறுதினம் காலை 8 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச் சொரூபப் பவனியும் இடம்பெறும்.

திருவிழாவை யொட்டி யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து நாளை மாலை 3. 30 மணிக்கும், நாளை மறுதினம் காலை6. 30 மணிக்கும் விசேட பஸ் சேவை முகமாலைக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

வெள்ளி முதல்
பிரகாஸ்ராஜ் - ராதிகா
தேவயானி நடிக்கும்
செந்தூரம்
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(59242)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
15 - 09 - 98 முதல்
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
( ரீல்ஸ் )
காட்சி: 10-30, 2-30
(59283)

## சிவா திரை

சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தினசரி
10-30 — 2-30 மணி.
மம்முட்டி - சுமன்
நக்மா நடிக்கும்
பிரதிநிதி
(புதிய வெளியீடு)
(சி/4922)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

வலிகாமம் தெற்கு செப். 18
புன்னாலைக் கட்டுவன் தெற்கு மத்தனோடை கலைவாணி பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

இவ் விழாவில் சுன்னாகம் பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஜே. பி. குணரத்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலி- தெற்கு சனசமூக நிலையங்களின் சமாச தலைவர் ஞா. தேவச்சந்திரன் கலந்து கொள்வார். (ஐ-152)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளி அம்மை அருணாசலம்

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி வள்ளி அம்மை அருணாசலம் 17. 09. 98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம்பிள்ளை அருணாசலத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம்) அன்பு மனைவியும், பரமேஸ்வரி (கனடா), கலாநிதி மகேஸ்வரி (கனடா), சோமசுந்தரம்பிள்ளை (பட்டயக்கணக்காளர், யாழ்ப்பாணம்), ராஜசுந்தரம் (எந்திரவியலாளர், லண்டன்), ராஜராஜேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான கணேஷன், தியாகராஜா (பட்டயக் கணக்காளர்), மற்றும் லீலாவதி (கனடா), ரூபாவதி (லண்டன்), விக்னராசா (தொழில் வணிக ஆலோசகர், கொழும்பு), மங்கையர்க்கரசி (பபா, கொழும்பு), ஆகியோரின் மாமியாரும், நிர்மலராஜன், தேவராஜான், ஜெயராஜன், ரஜினி, பானுமதி, சுந்தரி, லக்சுமி, முரளி, பாபு, தங்கா, நளாயினி, சுமித்திரை, அருணாசலம், றோகினி, கும்சி, சுரேந்திரன் சிவரஞ்சினி, பாலகௌரி, பவானி, முருகன், கணேசன், மணி, உமா, கலைமகள், திருமகள், மைதிலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை 19. 09. 98 சனிக்கிழமை காலை 19/3 இல் வேட்கிரசன் கொழும்பு 07 இல் மருமகன் திரு கு. விக்னராசாவின் இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சோமசுந்தரம்பிள்ளை
(மகன்)
பட்டயக் கணக்காளர்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(59286)

### முருகேசு வடிவேலு

பருத்தித்துறை, மாதனை குமாரசிட்டியைச் சேர்ந்த முருகேசு வடிவேலு அவர்கள் 11-09-98 அன்று ஜேர்மனியில் அகால மரணமடைந்தார்.

இவர் தாமு முருகேசு அவர்களின் அன்புமகனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், கிரிதரன், ருக்மணி (பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

குமாரசிட்டி, மாதனை,
பருத்தித்துறை. (59266)

### முத்துக்குமாரு சபாநடேசன்

(அரச ஒப்பந்தகாரர்)

அராலியைப் பிறப்பிடமாகவும், ஐந்துசந்தி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சபாநடேசன் 17-09-98 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு செல்லமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற நாகம்மா, பொன்னம்மா, ராசம்மா, கந்தையா, சின்னையா, வள்ளியம்மா ஆகியோரதும் தருமலிங்கத்தினதும் அன்புச் சகோதரரும், யோகநாதன், திருமதி ஞானாம்பிகை கனகராசா, மகேஸ்வரி திருஞானம், பரராசசிங்கம் பரமேஸ்வரி (கனடா), பரமசிவம் வசந்தமலர், சண்முகலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், சதாசிவம் (கொழும்பு), திருமதி ஞானேஸ்வரி சின்னப்பாபிள்ளை (கொழும்பு), திருமதி சிவபாக்கியம் மகேந்திரன், நகுலநாதன் (ஒப்பந்தகாரர், கொழும்பு) ஆகியோரின் சிறிய தகப்பனும், யோகேந்திரன் (ஜேர்மனி), திருமதி கமலநாயகி சண்முகலிங்கம், தர்மேந்திரன் (பிரான்ஸ்), திருமதி ரதி மகாலிங்கம் (கொழும்பு), ரவீந்திரன் (பிரான்ஸ்), திருமதி சித்திரா யோகராசா (பிரான்ஸ்), நடனேந்திரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (18-09-98) காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியை கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. சண்முகலிங்கம்
(மருமகன்)

இல: 11, நாவலர் வீதி,
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம். (59279)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பஸ் நிலையத்தில் "பிக் பொக்கற்" பேர் வழிகள்
## பயணிகளுக்கு அறிவுறுத்து

திருநெல்வேலி, செப். 18

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் "பிக் பொக்கற்" பேர்வழிகள் நடமாட்டம் அதிகரித்து வருவதால் பிரயாணிகள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. கப்பல் மூலம் வந்து சேரும் இடம்பெயர்ந்த பயணிகளிடமும், விமான மூலம் இங்கு வரும் பயணிகளிடமும் இத் திருடர்கள் தங்கள் கை வரிசையைக் காட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

கடந்த வாரம் கப்பல் மூலம் வந்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒருவரின் சேர்ட் பொக்கற்றினுள்ளே வைக்கப்பட்டிருந்த 500 ரூபா பணமும், தேசிய அடையாள அட்டையும் யாழ். பஸ் நிலையத்தில் வைத்து காணாமல் போய் விட்டன. "பிக்பொக்கற்" அடிப்பதிலும் உடைமைகளைத் திருடுவதிலும் 10 முதல் 12 வயது மதிக்கத்தக்க சிறுவர்களே பெரும்பாலும் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகின்றது. சில திருடர்களுக்கு இச் சிறுவர்கள் ஏஜெண்டுகளாகச் செயற்பட்டு வருகின்றனர். கப்பற் பயணிகளையும் விமானப் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு பஸ் வண்டிகள் யாழ். பஸ் நிலையத்திற்குள் வந்ததும் இச் சிறுவர்கள் அங்கு வந்து சேர்ந்து விடுகின்றார்களாம். பிச்சை கேட்கும் சாக்கில் "பிக்பொக்கற்" அடிக்கும் வேலையிலும் இவர்கள் ஈடுபடுகின்றார்கள். "பிக்பொக்கற்" அடிக்கும் போது பணத்தை மட்டும் "அபேஸ்" செய்து விட்டு அதனுடன் இருக்கும் தேசிய அடையாள அட்டைகளை பஸ் நிலையப் பகுதியில் வீசி எறிந்து விடுகின்றார்கள். இவ்வாறு அண்மையில் வீசி எறியப்பட்ட எட்டு தேசிய அடையாள அட்டைகளும், மூன்று இராணுவ அடையாள அட்டைகளும், தற்காலிக அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ஐ-135)

## செஞ்சிலுவை உதவியுடன்
## வடமராட்சி கிழக்கிலும் சொட்டு மருந்து வழங்கல்

வடமராட்சி, செப். 18

இராணுவக் கட்டுப்பாடற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலும் நாளை சனிக்கிழமை போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை செய்துள்ளது.

போலியோ சொட்டு மருந்து வழங்க வடமராட்சி கிழக்கில் 6 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென்மேற்குப் பிரதேசங்களில் போலியோ சொட்டுமருந்து வழங்க 30-க்கும் மேற்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாளை சனிக்கிழமை முதலாம் கட்டமாகவும் ஒக்ரோபர் 24 ஆம்திகதி இரண்டாம் கட்டமாகவும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

(ஐ-173)

## 396 விவசாயிகள் மண்வெட்டி பெற்றனர்

சுன்னாகம், செப். 18

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்குப் பகுதியில் மேலுமொரு தொகுதி விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட இம் மண்வெட்டிகளை 396 பயனாளிகள் பெற்றுக்கொண்டனர்.

(ஐ-127)

## 'தடம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கலை கலாசார மன்றம் நடத்தும் "தடம்" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா காமினி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் மன்றத் தலைவர் த. விஜயசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், வவுனியா பிரதித் திட்டப்பணிப்பாளர் செ. சுவாமிநாதன், மிதுஷா முகவர் தபால் நிலைய உரிமையாளர் எஸ். கமலானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

வெளியீட்டுரையை வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க. அழகரட்ணமும், ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக மெய்யியற்றுறை விரிவுரையாளர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, திருகோணமலை கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த கவிஞர் சு. வில்வரட்ணம் ஆகியோரும் நிகழ்த்துபவர்.

(ஐ-8)

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

குரும்பசிட்டி சன்மார்க்க சபை கல்வி மேம்பாட்டு நிதியம் சார்பில் அமரர் த. இராசரத்தினம், அமரர் மு. சபாரத்தினம் ஆகியோர் நினைவுப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு இணுவில் கிழக்கு அம்மா அச்சக அண்மையில் தலைவர் வே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக காங்கேசன்துறை இலங்கை வங்கி முகாமையாளர் ந. சிவரத்தினமும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் அதிபர் அ. மு. அருணாசலமும் கலந்து கொள்வர்.

(ஐ-30)

## கணவன் இறந்ததாககூறி ஓய்வூதியம் பெற்ற பெண்!

கொழும்பு, செப். 18

தனது கணவன் உயிரோடு இருக்கையில் போலி மரணச் சான்றிதழைச் சமர்ப்பித்து கடந்த 7 ஆண்டுகளாக விதவைகளுக்கான ஓய்வூதியத்தைப் பெற்றுவந்த பெண் ஒருத்தி ரகசியப் பொலீசாராலும் ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகளாலும் விசாரிக்கப்பட்டுவருகிறார்.

இந்தப் பெண்ணின் கணவன் புகையிரதத் திணைக்களத்தில் பணியாற்றி வந்தார் எனவும் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையைத் தொடர்ந்து அவர் வேலையை இழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது வேலையை இழந்த கணவனுக்கு ஓய்வூதியம் கிடைக்காது என்பதால் இந்தப் பெண் தனது கணவன் இறந்ததாகத் தெரிவித்து போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கடந்த 7 ஆண்டுகளாக விதவைகளுக்கான ஓய்வூதியத்தைப் பெற்று வந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் கடந்த 7 ஆண்டுகளில் ஒருலட்சத்து 71 ஆயிரத்து 144 ரூபாவை இவ்வாறு மோசடி செய்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் திருமதி பி. எம். ஜி. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

## 2 வயதுக் குழந்தைக்கு இலங்கையில் எய்ட்ஸ்!

கொழும்பு, செப். 18

இலங்கையில் 'எய்ட்ஸ்' நோயினால் இரண்டு வயதுக்குழந்தை ஒன்று பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகச் சிறுவர் பாதுகாப்புநிறுவனம் தெரிவித்துள்ளது.

'எய்ட்ஸ்' நோய்க் கிருமியால் பாதிக்கப்பட்டுள்ள அந்தக் குழந்தை தொடர்பான விவரங்களை வெளியிட விரும்பாத அந்த அமைப்பு, அக்குழந்தை ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 85 எய்ட்ஸ் நோயாளிகளில் குறைந்த வயதையுடைய குழந்தை ஒன்று பாதிக்கப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

உறுதி செய்யப்பட்ட 85 எய்ட்ஸ் நோயாளிகளில் 65 பேர் இறந்து விட்டதாகவும்—

சுமார் 2 ஆயிரம் பேரில் இந்நோய் அறிகுறி உள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## சுகாதார ஊழியருக்கு தீபாவளி முற்பணம்

யாழ். சுகாதாரத் திணைக்களத்திலும், யாழ். பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு எதிர் வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பண்டிகை முற்பணக் கடனாக தலா 2 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

நிரந்தர ஊழியர்கள், தற்காலிக ஊழியர்கள், சமயாசமய ஊழியர்கள் ஆகியோருக்கு— இவ் வருடத்தில் வேறு பண்டிகைகளுக்கு முற்பணக் கடன் எடுக்காதவர்களுக்கு— இது வழங்கப்படவுள்ளதாகவும், சமயா சமய ஊழியர்கள் 9 மாத சேவையைப் பூர்த்தி செய்திருப்பின் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும், விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவருக்கு ஊடாக அடுத்தமாதம் 2ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்க வேண்டும் என்றும், யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)


பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை கொடிய போலியோ நோயிலிருந்து காப்பாற்றுங்கள்

இந்நோயினால் பிள்ளைகள் மரணிக்கலாம் அல்லது ஆயுட்கால அங்கவீனராகலாம்.

போலியோ தடுப்பு மருந்து கொடுக்கும் தினமாகிய

19-09-1998, 24-10-1998

ஆகிய இரு தினங்களிலும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்து கொடிய போலியோ நோயிலிருந்து காப்பாற்றுங்கள்.

- கோப்பாய் லயன்ஸ் கழகம்

பிரசுர அன்பளிப்பு:

லயன் ஆ. சற்குணநாதன்

செல்வன்ஸ் டீசல் எஞ்ஜினியர்ஸ் கோப்பாய்ச் சந்தி.

(59272)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**தேவை**

புவறாயிலர் இறைச்சிக் கோழிகள் தேவை; தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்;
(59248)

**புறொயிலர் குஞ்சுகள்**

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; பதிவு செய்தோரும் மற்றும் தேவைப்படுவோரும் பெற்றுக் கொள்ளவும்; "மல்லிகாபதி", சந்தை கிழக்கு, ஒழுங்கை, மானிப்பாய்,
(59265)

**கோழிக்குஞ்சுகள்**

ஒரு நாள் கோழிக குஞ்சுக்குப் பதிவு செய்தவர்கள் 21-09-98 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்; பொது முகாமையாளர், யாழ்; மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி–4912)

## சிறுவர்களுக்கு கலைக் கூடம்

அரியாலை, செப்; 18

சிறுவர்களுக்கான கலைக் கூடம் ஒன்றை யாழ், திருமறைக்கலாமன்றம் ஆரம்பிக்கவுள்ளது.

சிறுவர்களின் உடல் உள வளர்ச்சியை உன்னதமான முறையில் பேணவும், ஏனைய தாக்கங்களிலிருந்து அவர்களை கலை வழியாலும், கண்ணியமான வழி நடத்தலாலும் பாதுகாக்கவும் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான கலைக் கூடம் ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;
(ஐ-19)

## மண்கும்பான் ஆலயம்

யாழ்ப்பாணம், செப்; 18

வேலணை மண்கும்பான் வீரகத்தி விநாயகர் ஆலயப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் அங்கிருந்து வாபஸ் பெற்று விட்டதால் மேற்படி ஆலயம் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது;

கடந்த எட்டு வருடங்களாக இந்த ஆலயப் பகுதி படையினர் வசம் இருந்தமையால் நித்திய நைமித்திய பூசைகள் எதுவும் நடைபெறவில்லை;
(ஐ-5-30)

## புலமைப் பரிசில் 1999

2-வது பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றோர்

அ; அனுஷானி – 171 (சுண்டுக்குளி)

தி. கீதாஞ்சலி – 171 (சுண்டுக்குளி)

வி; சகிஸ்ணா – 170 (சென்; ஜோன்ஸ்)

அடுத்த பரீட்சை:

20 — 09 — 1998
பி; ப; 1-00 மணி
(எவரும் கலந்து கொள்ளலாம்)

ஆண்டு 4 முதல் O/L வரையிலான வகுப்புகளுக்கு

**I. B. S.**


சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்
(59271)

## உடன் சந்திக்கவும்

பயிற்சி மற்றும் கல்வி இணைப்பு உத்தியோகத்தர் பதவிக்கான

நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்பட்டோர், அதனை யாழ்ப்பாணத்தில் நடத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாட 19- 09- 98 சனி காலை 10. 30 மணிக்கு

புதிய உயர்கல்லூரியில் சந்திக்கவும்.
(59268)



யாழ். நாயன்மார்கட்டு

## ஸ்ரீ இராசராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகள்

ஷெ ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பெருமளவிலான திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. இத்திருப்பணி வேலைகள் நிறைவுற அம்பிகை அடியார்களின் நிதியுதவி வேண்டப்படுகின்றது;

நிதியுதவி புரிய விரும்புவோர் தயவு செய்து ஆலயத் திருப்பணிச் சபையினருடன் தொடர்பு கொள்ளவும்;

— ஷெ ஆலய திருப்பணிச் சபையினர்.

விளம்பர அன்பளிப்பு:

**சீமாட்டி புடைவைக் கடல்**
இல.122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(59159)

## பாராட்டு விழா



யா/ சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபரும், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை நிறுவுனருமாகிய

அமரர் V. சிவசுப்பிரமணியத்தின் மைந்தன்

**லயன் V. S. சிவரட்ணம்**

(Dip – in – Valuation A. I. V.)

(யாழ்; அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர், இலங்கை வங்கி மதிப்பீட்டாளர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவர், முன்னாள் (யூரியுமாவார்.)

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி கௌரவிக்கும் பாராட்டு விழா 19 – 09 - 1998 சனி பிற்பகல் 1-00 மணிக்கு

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில்

திருமிகு. மு. பாஸ்கரதேவன்
(கிராமசேவை உத்தியோகத்தர்)
அவர்களின் தலைமையில் நடைபெறும்;

விழா அமைப்பாளர்
சுன்னாகம் மக்கள் சார்பில்

சுன்னாகம்;
(59270)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை

அமரர் த. இராசரத்தினம்
அமரர் மு. சபாரத்தினம்

## நினைவுப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

மேற்படி நிகழ்வு இணுவில் அம்மா அச்சக அருகே 20-09-98 ஞாயிறு காலை 9-30 மணிக்கு இளைப்பாறிய அதிபர் வே; தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்:- திரு. த சிவரத்தினம் A; I; B, (முகாமையாளர், இலங்கை வங்கி காங்கேசன்துறை)

சிறப்பு விருந்தினர்:- திரு. வ. மு. அருணாசலம் (அதிபர், மானிப்பாய்மெமோறியல் ஆங்கில பாடசாலை)

அன்புடன் அழைக்கின்றோம்;

பொ. பாலகுமார்
பொதுச் செயலர்.
(59267)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வேம்படி மகளிர் உயர்தர பாட.சாலை தரம் 6 அனுமதி -1999

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் 21 - 09 - 98 முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ கல்லூரியினால் விநியோகிக்கப்படும் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

★ மாணவர் 01—02—88 இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்க வேண்டும்.

★ கல்லூரி அலுவலகத்தில் ரூபா 40 செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்;

விண்ணப்ப முடிவு திகதி: 02 - 10 - 98 வெள்ளிக்கிழமை

பரீட்சை 31 - 10 - 98 சனிக்கிழமை நடைபெறும்.

9-30 - 10-30 தமிழ்
10-45 - 12-00 கணிதம்

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அதிபர்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
(சி/ 4915)

## கொக்குவில் லயன்ஸ் கழகம்

ஆதரவில் இடம்பெறும்

## கொக்குவில் இந்துக் கல்லூரி லியோ கழகத்தின் தலைமைத்துவகருத்தரங்கு

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்.

நாள்: 18 - 09 - 98 வெள்ளிக்கிழமை.

நேரம்: காலை 9. 30 மணி தொடக்கம் 2. 30 மணி வரை,

தலைவர்: திரு. பொ. கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

**லயன்ஸ் கழகம், யுனிசெவ் இணைந்து போலியோ சொட்டுமருந்து வழங்கல்**

கொக்குவில் லயன்ஸ் பகுதியில்:

கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் மத்திய மருந்தகம் கொக்குவில், கோண்டாவில்

நாள்: 19 - 09 - 98 முதலாவது சொட்டு மருந்து
24 - 10 - 98 இரண்டாவது சொட்டு மருந்து

★ பதிவு செய்யப்படாத திருமணத் தம்பதிகளுக்கும் பிறப்பு பதிவு செய்யப்படாத குழந்தைகளுக்கும் இலவசமாக பதிவு செய்து வைத்தல்

இடம்: காந்திஜி சனசமூக நிலையம் கொக்குவில் மேற்கு;

காலம்: 19 - 09 - 98 சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணி

விளம்பர அன்பளிப்பு:

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்.
(59274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். அபிவிருத்திக்குரிய நிதி திரும்பியது பற்றி விசாரணை நடத்த ஜனாதிபதியிடம் கோரிக்கை

## 3 எம். பிக்கள் மகஜர்

யாழ்ப்பாணம், செப், 18

யுத்தத்தால் அழிந்து சிதைந்துள்ள யாழ். மாவட்டத்தை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியைக் கொண்டு அபிவிருத்தி செய்யமுடியாமல் இருப்பதற்குக் காரணம் ஒரு தனிமனிதனின் போக்கே, கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டு மீள திறைசேரிக்கு நிதி சென்றமை தொடர்பாக பூரணமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

யாழ். மாவட்ட எம். பிக்களான என்.ஆர். இராமேஸ்வரன், என். ஆர். இராமமூர்த்தி, ஏ. எம், இலியாஸ் ஆகியோர் கூட்டாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தேர்தலுக்குப்பின இதுவரைக்கும் நடந்த நிதி ஒதுக்கீடு சம்பந்தமான செயற்றிட்டங்களில் முறைகேடுகள் பற்றி உரிய அமைச்சிற்கும் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கும் விடயங்கள் பின் வருமாறு.

★ 1995 ஆம் ஆண்டு ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 25 லட்சங்கள் வீதம் முறையே பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 250 லடசங்களாகும். இதில் 135 லட்சங்கள் மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி 115 லட்சங்கள் மீள திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 135லட்சங்களில் பிற மாவட்டங்களுக்கு முறையே அம்பாறை மாவட்டத்திற்கு 6 லடசங்களும், திருகோணமலை மாவட்டத்திற்கு 16 லட்சங்களும், மட்டக்களப்பு மாவடடத்திற்கு 12 லட்சங்களும், புத்தள மாவட்டத்திறகு 11 லட்சங்களும், குருநாகல் மாவட்டத்திற்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுமாக பிறமாவட்டங்களின் மொத்தம் 46 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் யாழ். மாவட்டத்திற்கு 88 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக செலவிடப்பட்டுள்ளது.

★ 1996 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட நிதியான 250 லட்சங்களில் 160 லட்சங்கள் மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதியான 90 லட்சங்கள் மீள திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ் ஆண்டும் பிற மாவட்டங்களுக்கு முறையே அம்பாறை மாவட்டத்திற்கு 10 லட்சங்களும், திருகோணமலை மாவட்டத்திற்கு 15 லட்சங்களும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 14 லட்சங்களும், புத்தள மாவட்டத்திற்கு 16 லட்சங்களும், குருநாகல் மாவட்டத்திற்கு 2 லட்சங்களுமாக பிற மாவட்டங்களின் மொத்தம் 57 லட்சங்களுமாக யாழ். மாவட்டத்திற்கு 103 லடசங்களும் மொத்தமாக செலவிடப்பட்டுள்ளது.

★ 1997 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட நிதியான 250 லட்சங்களில் 190 லட்சங்கள் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. மிகுதியான 60 லட்சங்கள்மீளதிறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் பிற மாவட்டங்களுக்கு முறையே அம்பாறை மாவட்டத்திற்கு9 லட்சங்களும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 12 லட்சங்களும், திருகோணமலை மாவட்டத்திற்கு 13 லட்சங்களும், புத்தள மாவட்டத்திற்கு 19 லட்சங்களும், நிர்வாகச் செலவாக 6 லட்சங்களுமாக பிறமாவட்டங்களின் மொத்தம் 59 லட்சங்களுமாக யாழ். மாவட்டத்திற்கு 131 லட்சங்கள் மாத்திரமே மொத்தத்தில் செலவிடப்பட்டுள்ளது.

★ 1998ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதியானது ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 40 இலட்சங்கள் வீதம் முறையே பத்து உறுப்பினருக்குமான நிதி 400 லட்சங்களாகும். இதில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுமான என். ஆர். இராமேஸ்வரன், டாக்டர். ஐ. எம். இலியாஸ், என். ஆர். இராமமூர்த்தி ஆகியோரின் நிதிக்கான திடடங்கள் இவ்வாண்டு மாசி மாதம் 120 லட்சங்களுக்கான அபிவிருத்தித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் அதற்கான செயற்றிட்டங்கள் இது வரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் அவை முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எமக்குரிய ஜனநாயக உரிமை மீறப்பட்டதால் இந்த நிதி அனைத்தும் தடைப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாயுள்ளது.

நாம் இவ்வறிக்கையை சமர்ப்பிப்பதற்கானகாரணம் 1997 — 1998-ற்கான எமது அபிவிருத்தி நிதிக்கான திட்டங்கள் பூரணமாக கொடுக்கப்பட்டும் அவை முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது. யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதாகவும் வேலை இல்லாத இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் சம்பந்தப்பட்டவர்கள் மீள குடியேறியவர்களுக்கோ, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவீடுகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் திருத்துவதற்கோ சுயதொழில் முயற்சிக்கு ஊக்குவிப்பதற்கோ இந்நிதியிலிருந்து ஒரு சதமேனும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

யுத்தத்தால் அழிந்து சிதைந்துள்ள யாழ். மாவட்டத்தை இந்த நிதியைக் கொண்டு அபிவிருத்தி செய்ய முடியாமல் தனி ஒருவரின் அராஜகப் போக்கால் இவ்வளவு நிதியும் திறைசேரிக்கு திரும்பிச் சென்றுள்ளதென்பது மிகவும் வேதனைதரும் விடயமாகும், எனவே சம்பந்தப்பட்டவர்களின் இச்செயற்பாட்டிற்கு பூரண விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றோம் — இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# இலியாஸ் எம். பி பண மோசடியில் ஈடுபட்டதாக மக்கள் முறைப்பாடு

## டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, செப். 18

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஐ. எம் இலியாஸ் பணமோசடியில் ஈடுபட்டார் என்று மக்கள் தெரிவித்ததன் பேரிலேயே யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அவரின் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலியாஸ் யாழ். தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு சமர்ப்பித்த திட்டங்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கி வந்தோம். ஆனால் இமமுறை அவர் தொடர்பாகப் பல குற்றச்சாட்டுக்கள் கிடைத்தபடியால் அவ்வாறு நிதி ஒதுக்கப்படவில்லை.

புத்தளத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு இம்முறை யாழ். தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழு நேரடியாகவே 21 லட்சம ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. இது சென்ற முறையைவிட இருமடங்காகும். — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

புத்தளத்தில் இடம் பெயர்ந்த நிலையில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு குடிதண்ணீர், மலசல கூடம் போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லை. அதனாலேயே அவர்களுக்காக யாழ். தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் இருந்து கிடைக்கும் எனது 40 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருமாறு டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியிருந்தேன்.

ஆனால் கடந்த 24 ஆம் திகதிக் கூட்டத்தில் பகிரங்கமாகவே டக்ளஸ் தேவானந்தா என்னுடைய திட்டங்களுக்கு, யோசனைகளுக்கு ஒரு சதம் கூட ஒதுக்க முடியாது என்று கூறினார் — என்று இலியாஸ் குற்றஞ் சாட்டியுள்ளார். (ஐ-3-6)

# தப்பியோடியோரை பிடிக்க குறுகிய காலத் திட்டம்

கொழும்பு, செப். 18

இராணுவ சேவையிலிருந்து தலைமறைவாகி குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் இராணுவ வீரர்களை கைது செய்ய பொலீஸ் தலைமையகம் குறுகியகால வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுக்கான பிரதி பொலீஸ்மா அதிபர் எச். எம். பி. கொட்டதெனியா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில், தலைமறைவாகியுள்ள இராணுவ வீரர்களின் விவரம், கைரேகை அடையாளங்கள் என்பன கணனிமயப்படுத்தப்படும்.

பொதுமன்னிப்புக் காலத்தில் பலர் சரண் அடைந்தாலும் கூட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள சரண் அடையவில்லை என்றார். (இ-21)

# சிறுவர் தினம் கொண்டாட வலி.வடக்கில் ஏற்பாடு

சுன்னாகம், செப். 18

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தினர் சிறுவர் தினவிழாவைச் சிறப்பாக நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

அடுத்த மாதம் முதலாந் திகதியிலிருந்து 10 ஆம்திகதி வரை சிறுவர்தின விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி. சிவகரன் மேற்கொண்டு வருகிறார்.

இவ் விழாவை முன்னிட்டு ஓவியம், கவிதை, கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

வலி, வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 18 வயதிற்கு உட்பட்டோர் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாமெனவும், மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் கலந்து கொள்வோர் எதிர் வரும் 25 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவக்குமாறும் கேட்கபபட்டுள்ளது.

அடுத்த மாதம் 3 ஆந்திகதி காலை 10 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# தொழிலாளர் பாதுகாப்புக்கு பொலீஸ் நிலையம் அமைக்க செல்லச்சாமி கோரிக்கை

கொழும்பு, செப். 18

வெளியிடத் தொடர்புகள் எதுவும் இன்றி தனித்து விடப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட வெவல்லவத்த தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அங்கு நிரந்தரமான பொலீஸ் நிலையம் அமைக்கப்படவேண்டும்.

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரத்தினபுரி நகரில் மட்டுமே தற்சமயம் பொலீஸ் நிலையம் உள்ளது. வெவல்லவத்த கிராமத்தில் இருந்து அந்த பொலீஸ் நிலையம் 32 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

அக்கிராம மக்கள் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்ய போக்குவரத்து வசதியும் இல்லை. அத்துடன் அவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட சிங்களமக்கள் வாழும் பிரதேசத்தின் ஊடாகவே அவர்கள் இரத்தினபுரி பொலீஸ் நிலையத்துக்கு செல்லவும் வேண்டியுள்ளது.

தனித்துவிடப்பட்டுள்ள மக்களுக்கு உதவ அங்கு பொலீஸ் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் — இப்படி அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

## செய்திச் சாரம்

### கலை, நடனப் போட்டிகள்

சண்டிலிப்பாய், செப். 18

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை எதிர் வரும் நவராத்திரிவிழாவை முன்னிட்டு காரைநகர் முன் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களிடையே கலை, நடனப்போட்டிகளை நடத்தவுள்ளதாக சபையின் செயலாளர் ச. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஐ)

### நீதிமன்றில் குண்டுப்புரளி

கொழும்பு, செப். 18

கொழும்பு வஜ்ஹோல் வீதியில் உள்ள தொழில் தகராறு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் காலை 9-20 மணியளவில் குண்டுப்புரளி ஏற்பட்டது. இதனால் நீதிமன்றசெயற்பாடுகள் நிறுத்தப்பட்டு பரபரப்பு ஏற்பட்டது.

நீதிமன்றத்துக்குள் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த தொலைபேசி அழைப்புக் காரணமாகவே பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் விமானப் படையினரும், பொலீஸாரும் சோதனையிட்டு அங்கு குண்டு எதுவும் இல்லை என்று தெரிவித்ததை அடுத்து நீதிமன்ற செயற்பாடு மீண்டும் ஆரம்பமானது. (ஐ-10-3)

### 3 ஊர்காவல் படையினருக்கு பணப் பரிசு

கொழும்பு செப். 18

விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கு உதவியமைக்காக மூன்று ஊர்காவற்படை வீரர்களுக்கு பதவியுயர்வுகளும் பணப்பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி பேருநுவரையில் உள்ள நிலாவெல பகுதி இராணுவ நிலை மீது நடத்தப்படட தாக்குதலை முறியடிக்க இந்த மூன்று ஊர்காவற் படையினரும் உதவியதாகத் தெரிவிக்கப்படடது.

கொழும்பில் உள்ள ஊர்காவற்படை தலைமையகத்தில் வைத்து பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் மாலினி பீரே இவர்களுக்கான பணப்பரிசுகளை வழங்கினார். (ஐ 6)

### கடன் வழங்க நடவடிக்கை

வலி. மேறகு, செப். 18

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 100 விவசாயிகளுக்கு பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான கடன்வழங்கப்படவுள்ளது.

பிரதேச விவசாய சம்மேளனத்தினூடாக இக்கடனை வழங்குவதறகு பிரதேச செயலர் கா. சந்திரராசா நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். (ஐ-175)

### தண்ணீர்த்தாங்கிகள்

குருநகர், செப். 18

சின்னககடைப் பொதுச் சந்தையிலுள்ளவர்களின் குடிதண்ணீர்ப் பாவனைக்கென இரு சிறிய தண்ணீர்த் தாங்கிகளை யாழ். மாநகரசபை அண்மையில் அமைத்துள்ளது. பவுசர் மூலம் எடுத்து வரப்படும் குடிநீர் இவற்றில் நிரப்பப்பட்டு பொதுமக்களாலும், வியாபாரிகளாலும் பயன்படுத்தப்படுகிறது. (ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்போடப்பட்டுள்ளது

வட பிராந்திய Y.M.C.A. ஒன்றியத்தினால் 19-09-98 அன்று நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதியும், பெறுபேறுகளும் பின்னர் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

- நிர்வாகம்

(59264)



# கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசார கழகத்தின்

வளர்ச்சி நிதிக்காக நடத்தும்

## மாபெரும் கலை நிகழ்ச்சிகள்

இடம்: யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானம்

காலம்: 19 - 09 - 1998 சனிக்கிழமை இரவு 7. 30 மணிமுதல் மறுநாள் காலை வரை

- ★ சிந்துநடைக்கூத்து
- ★ பல்குரல் இசை நிகழ்ச்சி
- ★ 'அருணா' இசைக்குழுவினர் வழங்கும் இசைத்தேன் அமுதம்.
- ★ 'ராகம்ஸ்' இசைக்குழுவினர் வழங்கும் இதயராகம்

தவிர்க்க முடியாத காரணங்களினால் தென்னிலங்கை இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற மாட்டாது.

★ ரிக்கட்டுக்களை நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

கழக நிர்வாகத்தினர்

விளம்பர அன்பளிப்பு:

**குலம் கிறீம் ஹவுஸ்**

22,6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(59234)


# 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 15 | 19 |
| — | — |
| 03 | 08 |
| — | — |
| 1912 | 1998 |

**அமரர்**

சங்கானை ''நிம்மதி''

## பொன்னையா கனகரத்தினம் J. P.

[இளைப்பாறிய PWD ஓவசியர், மஸ்கேலியா]

எங்களுக்கெல்லாம் அன்புவழி காட்டி, ஆர்வத்தை ஊட்டி,

ஆரமுதாக வாழ்ந்தீர்கள்!
பொறுமையின் உறைவிடமாய், நேர்மையின் புகலிடமாய்
எமக்கெல்லாம் கற்பக நிழலாய் நின்றீர்கள்!
வாழ்க்கைப் பாதைக்கு வழி காட்டும்
ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர்கள்!
இனி நாம் யாரை 'ஐயா' என்றழைப்போம்?
எப்பிறப்பில் காண்போம்? எங்கெல்லாம் தேடுவோம்?
தூய துயிலில் படுத்துறங்கிய எங்கள் ஐயாவே!
நீங்கள் இறைவன் ஒளியில் ஒளியாய்க் கலந்து விட்டீர்கள்...
அந்த ஒளி எமக்கு வழிகாட்டும்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துவளும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

''நிம்மதி''
தேவாலய வீதி,
சங்கானை.

(59253)

# மோப்ப நாயை ஈடுபடுத்த அனுருத்த எதிர்ப்பு

கொழும்பு, செப். 18

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி வரும் பயணிகளின் பொதிகளை மோப்ப நாய்கள் மூலம் சோதனை செய்யும் நடைமுறையை நிறுத்தி மாற்று யோசனையை முன்வைக்குமாறு பொலீஸ் மா அதிபரிடம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கேட்டுள்ளார்.

''மக்களின் பொதிகளை நாய் மூலம் சோதனை செய்வது சுகாதாரத்துக்கு உகந்தது அல்ல. ஆகவே மாற்று யோசனை பற்றி ஆராயவும்'' என்று அனுருத்த ரத்வத்த பொலீஸ் மா அதிபரிடம் கேட்டுள்ளார்.

அதே நேரம் — மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் பிரதான வீதியில் உள்ள சோதனை நிலையத்துக்கு முன்பாகக் கனரக வாகனங்கள் செல்லப் படையினர் தடை செய்துள்ளனர். (இ-3)

# ''பான்ட்'' வாத்தியப் போட்டி

யாழ். கல்வி வலயம் இரண்டுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் 513 ஆவது படையணியின் அனுசரணையுடன் வலயம் இரண்டு அலுவலகத்தினரால் நாளை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் ''பான்ட்'' வாத்தியப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் எட்டுக் கோட்டங்களின் முன்னணிப் பாடசாலை அணிகள் பங்குபற்றும். (இ-3)

# பல்கலைக் கழகத்தில் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 18

கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு கோரி கிழக்கு, தென் கிழக்கு, ரஜரட்டைப் பல்கலைக்கழகங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக்கழகத்திலும் அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், எழுதுவினைஞர் சங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம ஆகியன இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் பல்கலைக்கழக செயற்பாடுகள் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டன. (இ-3-9-14)

# பொது மலசலகூடம்

நெல்லியடி, செப். 18

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட மூன்றாம் குறுக்குத் தெருவில் 'யுனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் 15 அறைகளைக் கொண்ட மலசல கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இம் மலசல கூடம் எதிர் வரும் திங்கள் முற்பகல் 10 மணிக்கு யுனிசெவ் பிரதிநிதிகளினால் திறந்து வைக்கப் படவிருக்கின்றது. (ஐ-109)

# சிறுவர் தின நிகழ்வுகள்

பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட சிறுவர் உரிமைப் பாதுகாப்புக் குழு 'சர்வதேச சிறுவர் தினம்-1998' நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

[illegible] போட்டிகள் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. (இ-118)


# போதகர் லெஸ்லி மத்தியூஸ்

அவர்களின் இறை ஊழியத்தின்

## வெண் பொன் விழா

நாள்: 20 - 09 - 98 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9. 00 மணி
இடம்: கல்வாரி பூரண சுவிசேஷதேவாலயம். 89, பிறவுண் வீதி, கொக்குவில்.

எமது தலைமைப்போதகர் அவர்களின் இறை ஊழியத்தின் 25 ஆவது ஆண்டையொட்டி நடைபெறவுள்ள ஸ்தோத்திர ஆராதனையில் கலந்து கொள்வதற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மூப்பர்கள், ஊழியர்கள், சபை மக்கள்.

(59231)


# ஓராண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 20 | 18 |
| — | — |
| 06 | 09 |
| — | — |
| 1933 | 1997 |

திருமதி

## தேவசகாயம் பவுளினம்மா

கணப்பொழுதில் ஓராண்டு சென்று மறைந்ததம்மா
ஓராண்டு அல்ல, ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
மறக்குமா உம்மை நெஞ்சம் தாயே.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இன்று (18. 9. 98) வெள்ளி காலை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் வாடும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தும்மலை,
இளவாலை.

(59215)

# நீங்காத நினைவில் ஈராண்டு நினைவலைகள்



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு: |
| 11 | 11 |
| — | — |
| 06 | 10 |
| — | — |
| 1931 | 1996 |

திருமதி

## வைத்திலிங்கம் பூமணி

(பூமணி)

திதி: 18 - 09 - 98

ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயர்
எங்களுக்கு ஒளி விளக்காய்த்
திகழ்ந்த திருவிளக்கே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்ற எம் செல்வத்தாயே!
எம் நெஞ்சம் எல்லாம் துடிக்குதம்மா
அம்மாவே உங்கள் உயிர்தான்
எம்மை விட்டுப் பிரிந்ததம்மா – ஆனால்
உங்கள் நினைவு எம் மனதுக்குள் என்றும்
நிலைத்து நிற்குமம்மா!

உங்கள் ஆத்ம சாந்தியின் பொருட்டு இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

(சி-4902)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தாய்மார்களே!

வெள்ளம் வருவதற்கு முன்னரே அணைகட்டுவதன் மூலமே ஆபத்தைத் தடுத்துக் கொள்ளலாம். நோய் வருவதற்கு முன்னர் தடுப்பதே உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்குச் சிறந்த வழி.

சில நோய்கள் மக்களைப் பீடித்தாலும் உரிய சிகிச்சை செய்யக் குணமாகி விடும். ஆனால் சில நோய்கள் சிகிச்சையின் பின்னரும் தொடர்ந்து பாதிப்பைத் தந்த வண்ணமே இருக்கும். சிலநோய்கள் உயிராபத்தானவை. அவற்றையும் விட மக்களை நிரந்தரமாக ஊனமாக்கி வாழ்நாள் முழுவதும் வேதனை தரும் நோய்களும் உண்டு.

நோயற்ற வாழ்வே மனித வாழ்க்கையில் குறைவற்ற செல்வம் நோய் வந்தால் ஒருவனின் வாழ்க்கையில் உண்டாகும். துன்பங்களுக்கும் பின்னடைவுகளுக்கும் கணக்கில்லை.

வாழ்க்கை முழுவதிலும் வேதனையும், சோதனையும் தரும் கொடிய நோய்களில் ''போலியோ'' எனப்படும் இளம்பிள்ளை வாதமும் ஒன்றாகும். முந்திய காலங்களில் இந்த நோய் பலரின் வாழ்க்கையை இருள் கவ்வச் செய்திருக்கிறது.

இந்த நோய் அனேகமாக குழந்தைகளையே தாக்குவது உண்டு. எங்கள் பிரதேசத்திலும் ''போலியோ'' நோய் பலரை நிரந்தர அங்கவீனர்கள் ஆக்கியுள்ளது.

நோய் வந்த பின்னர் அதற்குச் சிகிச்சை பெறுவதனை விட அது வராமல் தடுப்பதே நல்லது. வருமுன் காக்கும் அவதானம் பல சிரமங்களையும், வேண்டாத வேதனைகளையும் தூர விரட்டி விடும். 'போலியோ' போன்ற கொடிய நோய்களை உலகத்திலிருந்து விரட்டிவிட வேண்டும் என்பதில் பல சர்வதேச அமைப்புக்கள் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுகின்றன.

அந்த வகையில் கடந்த பல வருடங்களாக போலியோ தடுப்பு இயக்கம் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கையில் இம்மாதம் 19 ஆம் திகதியும் (நாளை சனிக்கிழமையும்) — ஒக்ரோபர் 24 ஆம் திகதியும் தடுப்பு மருந்தேற்றும் தேசிய தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன

அந்தந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக, அண்மையில் உள்ள நிலையங்களில் போலியோ தடுப்பு மருந்து — சொட்டுமருந்து — 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டப்படுகிறது. பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு தவறாது சொட்டு மருந்தைக் கொடுத்து அவர்கள் ஊனமாவதைத் தடுக்க வேண்டும் இது ஒவ்வொரு தாய்மாரினதும் தவிர்க்க முடியாத பொறுப்பாகும்

போலியோ இளம் பிள்ளைகளைத் தாக்கும் நோய். அதனைத் தடுக்காவிட்டால் எதிர்காலச் சந்ததியினரில் ஒரு சாரார் ஊனமாகி விடுவர் என்பதனை உணர்ந்தே பெரும் பணச் செலவில் தடுப்புமருந்து ஊட்டும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சந்தர்ப்பத்தைத் தவறவிடாது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள் தாய்மார்களே!

# மானிட வாழ்வு நிறைவு பெறுவதற்கு சக்தியை வேண்டும் நவராத்திரி விழா

கல்வி, செல்வம், வீரம் ஆகிய முச்செல்வங்களும் வாய்க்கப்பெற்றால்தான் மானிடவாழ்வு முழுமையானதாக அமையும். இதரபரஇன்பங்களை அனுபவிப்பதற்கு இவை அடிப்படையாக அமைகின்றன. இவற்றுக்கு பெண் தெய்வங்களை உருவகித்து அவர்களைச் சிறப்பாக வழிபாடியற்றி இச் செல்வங்களைக் குறைவறப்பெற்று நிறைவாழ்வு வாழ்வதற்கு அமைந்த நாள்களே நவராத்திரி நாள்கள் ஆகும்.

நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள் எனப்பொருள்படும். அம்பிகையைத் துர்க்கையாகத் துதித்து, இலக்குமியாக இறைஞ்சி, சரஸ்வதியாக சரணடைந்து, மும்மூன்று தினங்களில் பூசனை புரிந்து, அவளது பாதார விந்தங்களைப் பணிந்து, வாழ்வுக்கு ஆதாரமானவற்றை அருளும்படி அஞ்சலி செய்கின்றோம்.

''எங்கெங்கு காணினும் சக்தியடா'' என்று பாடினான் பாரதி. சர்வமும் சக்தி மயம் அனைத்துயிர்களையும், அகிலத்தையும், ஏன்? அரசனையும் கூட அசைப்பவள் சக்தி. அந்த சக்திக்கு, வல்லமைக்கு, ஆற்றலுக்கு எடுக்கும் விழாவே நவராத்திரி விழாவாகும். அச்சக்தியினையே பராசக்தியாக உருவகித்து வழிபட்டனர் தமிழர்.

தனலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, வித்தியாலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, கஜலட்சுமி என அஷ்டலட்சுமிகளாக அஷ்ட ஐஸ்வரியங்களை அருள்பவள் அன்னை அபி

## ஞானக் கதிர்

ராமி பட்டர்பிரான் அபிராமியை பதினாறு பேருளும் பராபரையாகப்பாராட்டினார். முச் செல்வங்களை அருளும் துர்க்கையாக: இலக்குமியாக, சரஸ்வதியாக அவளை நவராத்திரி காலத்தில் அர்ச்சிக்கின்றோம். சகல செல்வங்களும் அருளும் வல்லவாம்பிகையாக அவள் விளங்குகின்றாள்.

வீரம் என்பது திண்ணிய நெஞ்சமாகவும், செல்வம் என்பது தீதிலாச் செல்வமாகவும், கல்வி என்பது துறைதோய்ந்த தெளிந்த நல்லறிவாகவும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவற்றால் வீட்டுக்கும், நாட்டுக்கும், நானிலத்துக்கும் நன்மை ஏற்படும். எம்மிடமுள்ள மூர்க்ககுணம், அகந்தை ஆகியவற்றை அழித்துமெய்ஞ்ஞானம்அருள்பவள் அன்னை அபிராமி.

அன்னை மகிடாசுரனை வதம் செய்தமையால் அவளுக்கு மகிஷமர்த்தனி என்ற பெயரும் உளது. திண்ணிய நெஞ்சை அசைவறு மதி எனலாம். 'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' என்ற இராமனது கூற்றில் வீரம் வெளிப்படுகின்றது. இத்தகைய வீரமே உண்மையானது. ஆள்பலமோ, ஆயுதபாலமோ, அடாவடித்தனமோ வீரமாகாது.

இல்லாதவனை இல்லாளும் வேண்டாள்; ஈன்

**வாசுகி சிவராமலிங்கம்**

றெடுத்த தாயும்வேண்டாள் அவன் வாய்ச்சொல் செல்லாக்காசாகி விடுகின்றது. இவற்றால் செல்வத்தின் மகிமைவிளங்கும் இத்தகைய அவசியமான செல்வத்தை அறவழியில் தேட வேண்டும் என்பதனாலேயே தீதிலாச் செல்வம் எனப்படுகின்றது. அடுத்தவனைச் சூறையாடியும், சூதாட்டம், போதை வஸ்து விற்பனை மூலம் கிடைக்கும் செல்வம் செல்வமாகாது. கொள்ளக் கொள்ளகுறையாத்த நிதியின் குவையை வேண்டாவிட்டாலும் வாழ்வில் அல்லற்படாதிருக்க கடின உழைப்பு, விடா முயற்சிமூலம் அளவோடு செல்வத்தை வேண்டுவோம்.

கல்வியேகருந்தனம். கண்ணுடையர் என்போர் கற்றோர் கற்றோர்க்குச் சென்றஇடமெல்லாம் சிறப்பு. மம்மர் அறுக்கும் மருந்தாய் அமைவது கல்வி. கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்— என்பவற்றால் கல்வியின் சிறப்பு விளங்குகின்றது. அத்தகைய கல்வியே ஏனைய செல்வங்களையும் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது. எனவே கற்கவேண்டிய வயதில் கல்வியைக் கற்கவேண்டும்.

அடிப்படைக் கல்வியை, அகலமான, ஆழமான கல்வியை, விஞ்ஞானக் கல்வியை, நவீன, பழமைய, துறைதோய்ந்த கல்வியை அருளும்படி கலைமகளின் கடாட்சத்தை வேண்டுவோம்.

இம்மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகின்றது. கவின் விழாவாக, கலை விழாவாக, தெய்வீக விழாவாக, தேசமெங்கும் கொண்டாடப்படும் விழாவாக, அம்பிகையின்விழாவாகவிளங்கும் நவராத்திரிவிழா நாடு செழிக்க வகைசெய்வதாகுக.

★

# 2 வருட காலத்தில் விவசாயிகளுக்கு 10 திட்டங்கள் மூலம் உதவிகள்

## நடந்ததும் நடவாததும்-3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட மீளக்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்கள், செயல்முறைகள் குறித்த கண்ணோட்டம் ஒன்றை. யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மக்கள் நலன் — வசதி— கருதி நடந்ததும் நடைபெறாததும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கண்ணோட்ட அறிக்கை உதயனில் பகுதி பகுதியாக அவ்வப்போது வெளிவரும்.

தற்பொழுது 10.000 ஹெக்ரயர் நெற்காணியில் 6 000 ஹெக்ரயர் காணியும் 7,500 ஹெக்ரயர் தோட்டக் காணியில 2,000 ஹெக்ரயர் நிலமுமே பயிரிடப்படுகின்றன. பாதுகாப்பு வலையங்கள் என்ற ரீதியில் பயிர்ச்செய்கைக்குரிய நிலங்களுக்குச் செல்ல முடியாத நியாயமற்ற தடைகளினால் விவசாயம் செய்யப்படும் காணியின் அளவு குறைந்துள்ளது. இதனால் பொருளாதார வீழ்ச்சி காணப்படுகின்றது. சிறிலங்காவின் மற்றைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்தில் கீழ்க்காணும் காரணங்களால் விவசாயம செய்வதற்குரிய செலவுகள் உயர்ந்தேகாணப்படுகின்றது.

அ. விவசாய இயந்திரங்களின் கூலி உயர்வு உ-ம்- ஏக்கர் ஒன்றுக்கு உழவு கூலி 1,440 ரூபா.

ஆ. விவசாய உள்ளீடுக்களின் விலை உயர்வு,

இ. இயந்திரமயமாக்கப்பட்ட இறைப்பினால் நீர்ப்பாய்ச்சுதல் கூலி உயர்வு,

ஈ. காணிகளின் குத்தகைப் பணம் உயர்வு.

### சந்தைப்படுத்தல் தடைகள

சிறிலங்கா அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வந்த போதிலும் மூடிய இருண்ட பொருளாதாரமே நிலவுகின்றது.

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு உள்ளூர்ச் சந்தை வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. உற்பத்திப் பொருள்களை வாங்கவோ அல்லது விற்பனை செய்யவோ பொறுப்பான ஸ்தாபனங்கள் எதுவும் இல்லை.

தனியார் வியாபாரிகளும் தரகர்களும் அவர்கள் கூறும் விலைக்கே விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களைக் கொடுக்க வேண்டியுள்ளது. விவசாயப்பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்புவதற்கான வசதிகள் மிகவும் குறைந்தளவே கிடைக்கின்றது. உற்பத்திச் செலவு உயர்வும் போக்குவரத்துச் செலவு உயர்வும் கொழும்புச் சந்தையில் போட்டியிடுவதற்கு இடையூறாக உள்ளன.

### ஸ்தாபன ரீதியான நிர்ப்பந்தங்கள்

விவசாய உற்பத்தி அதிக எண்ணிக்கையினராகிய சிறிய விவசாயிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது, இவர்கள் அரச நிறுவனங்களான விவசாயத் திணைக்களம், கமநலச்சேவை நிலையங்கள் முதலியன வழங்கும் காத்திரமான சேவையிலேயே தங்கியுள்ளனர். சென்ற இரு வருடங்களாக இந்தத் திணைக்களங்களின் செயற்பாட்டின் நிலை தளர்ந்துள்ளது. இரு வருட காலத்தில் இவற்றின் செயற்பாடுகளை விருத்தி செய்ய எதுவித காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக இல்லை.

### விவசாயிகளின் சொத்து நட்டங்கள்

யுத்த காலத்தில் விவசாயிகளும் தனியார் துறையினரும பாரிய நட்டங்களையும் பாதிப்புக்களையும் அனுபவித்துள்ளார்கள். அவர்களுக்கு இது வரை அரசு எதுவிதமான நட்ட ஈடு வழங்கவும் இல்லை; இலகு கடன்களை வழங்கி இத்துறையில் பலவித செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படவும் இல்லை.

விவசாயிகளின் நன்மைக்காக கீழ்க் காணும் செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

1) விதை வெங்காயத் திட்டம் — 9 கோடி ரூபா
2) விதை நெல் திட்டம்— 35,000 புசல்கள்.
3) விதை உருளைக்கிழங்கு — 250 மெ. தொன்.
4) நீர் இறைக்கும் இயந்திரங்களும், தெளிகருவிகளும் — 400
5) மண்வெட்டி விநியோகம் — 22,000
6) உணவு பாதுகாப்புத் திட்டம் (கெயர்) — 3,900 பயனாளிகள்
7) சுழற்சி முறைக் கடன் திட்டம் (யு. என். எச். சி. ஆர்.) — 12 லட்சம் ரூபா.
8) சுழற்சி முறைக் கடன் திட்டம் (ஊற்று, அறவழி, கூ. பு. நிறுவனம், ச. அ. மன்றம், ம. ந. கா. பிரிவு கியூடெக்) — 70 லட்சம் ரூபா
9) நீர் இறைக்கும் இயந்திரத் திட்டம் சீடா — 230
10) மண்வெட்டி விநியோகம்-கமநலசேவைத் திணைக்களம் — 15,000

வழங்கப்பட்ட உதவியில் தோல்வியுற்ற இரண்டு நிகழ்வுகள் வருமாறு;

1996 (ஜூன்-ஜூலை) காலப் பகுதியில் விதை வெங்காய செயற்றிட்டம் ஒன்றை அரசு 90 லட்சம் ரூபா பெறுமதிக்குச் செயற்படுத்தியது. விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக வலிகாமம் திரும்பி வந்தவர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை வெங்காயம வழங்கப்பட்டது.

இந்தத் திட்டம் கீழே தரப்பட்ட காரணங்களால் முழுமையான தோல்வியை தழுவிக் கொண்டது.

அ. பயனாளிகள் சரியான முறையில் இனங் காணப்படவில்லை. இதனால் சிலர் விதை வெங்காயத்தை சந்தையில் விற்றார்கள்,

ஆ. உள்ளீடு விநியோகங்கள் தேவைப்படும் காலங்களில் கிடைக்கக்கூடியதாக வழங்குவதற்குரிய நடைமுறையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

புரட்டாதி - 03
சனிக்கிழமை

திதி: சதுர்த்தசி முன்இரவு 09.14 வரை.
நட்சத்திரம்: மகம் முற்பகல் 07.58 வரை.
சுபநேரம்: 02.03 -04.33
ராகுகாலம்: 09.03 – 10.33
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

ஆடம்பர வாழ்க்கை மிகவும் அடிமைத்தனமானது; உழைப்பது மிகவும் கௌரவத்துக்குரியது.
— அலெக்ஸாண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பொருள்கள், சிமெந்து; கப்பல் மூலம் சமாசம் தருவிப்பு

அரியாலை, செப். 18

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு நுகர்வோர் சமாசத்திற்கு ஐயாயிரம் சிமெந்துப் பைக்கற்றுகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம்திகதி பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடைந்த 'ஹண்டி' கப்பலில் இப்பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பற் கட்டணம் செலுத்தியே இம்முறை பொருள்கள் எடுத்து வரப்பட்டிருப்பதாக சமாசத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நீரிறைக்கும் இயந்திரங்கள், பால்மா வகைகள், நவராத்திரி பூசைக்கான அவல், கடலை, சர்க்கரை, கற்கண்டு மற்றும் உணவுப் பொருள்கள் என்பன எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது கப்பற் கட்டணம் செலுத்தியே பொருள்களை சமாசம் தருவித்திருப்பதால் பொருள்களின் விலையில் வித்தியாசம் ஏற்படும் என்று சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## தென்மராட்சியில் மருந்துவழங்கும் இடங்கள்

தென்மராட்சி, செப். 18

தேசிய நோய் எதிர்ப்புத் தினத்தையிட்டு ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பின் வரும் இடங்களில் நாளை போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையம்.

★ நாவற்குழி தச்சன் தோப்பு கிராமசபை அலுவலகம்.

★ கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.

★ கைதடி மத்திய மருந்தகம்.

★ மட்டுவில் தெற்கு வளர்மதி ச. ச. நிலையம்.

★ மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை ச. ச. நிலையம்.

★ நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை.

★ சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

★ கச்சாய் அம்மன் கோயிலடி.

★ மீசாலைவடக்கு சமநல சேவை நிலையம்.

★ எழுதுமட்டுவாழ் பாலர் பாடசாலை.

★ கச்சாய் கிராம சபை அலுவலகம்.

★ மிருசுவில் அரச வைத்தியசாலை.

★ உசன் ஆரம்ப சுகாதார நிலையம்.

★ வரணி அரச வைத்தியசாலை.

★ மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம்.

★ இத்தாவில் கிராமசபை அலுவலகம்.

★ பளை அரச வைத்தியசாலை.

★ முருகானந்த நகர் சனசமூக நிலையம்.

(ஐ-117)

## 2 வருடத்தில்...

(ஏழாம் பக்கத் தொடர்)

ஒழுங்குகள் செய்யப்படவில்லை.

இ. உற்பத்திப் பொருள்களைசந்தைப்படுத்துதலுக்கு உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவில்லை. தங்கள் சேமிப்புக்களையும், தங்கள் உழைப்பையும் முதலீடு செய்த பல விவசாயிகள் இந்தப் பயிர்ச்செய்கையின் மூலம் மேலும் வலிமையுற்றார்கள்.

### விதை நெல் விநியோகம்

உலக உணவு ஸ்தாபனம் விதை நெல் இலவச விநியோகத்திட்டம்(35,000புசல்) ஒன்றை 1996 ஆம் ஆண்டு கால போகத்தில் நடைமுறைப்படுத்தியது. ஆனால் கொழும்பில் இருந்து விதை நெல் யாழ்ப்பாணத்திற்கு விதைப்புக் காலத்திற்குப் பிந்தி கிடைத்தமையினால் இத்திட்டம் வெற்றி அளிக்கவில்லை.

இத்துறையின் தேவைகளையும் ஏற்கனவே இத்துறைக்கு வழங்கப்பட்ட உதவிகளையும் விவரமாக பகுப்பாய்வு செய்யும் பொழுது, மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்ட காலப் பகுதியில் தேவையின் மிகவும் சொற்பமான பகுதியே நிறைவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். இதன் காரணமாகவே பல விவசாயிகள் போதிய தொழில் இன்மையால் துன்பகரமாக வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

(வளரும்)

## 6 ஆசிரியர்கள் இடமாற்றம்

பருத்தித்துறை, செப். 18

யாழ். வலயம் இரண்டு கல்வித்திணைக்களத்தினால் ஆசிரியர்கள் அறுவர் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களினதும் அவர்கள் இடமாற்றம் பெறும் பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:

★ செல்வி எஸ். பத்மராணி — மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்.

★ செல்வி வி. ஞானவர்ணி — அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

★ எஸ். சிவலோகநாதன் — வயாவிளான் மத்தியமகா வித்தியாலயம்.

★ எஸ். கடாட்சரா— ஸ்கந்தவரோதயக்கல்லூரி.

★ கே. அன்பழகன்— அல்வாய்அம்பாள்வித்தியாலயம்.

★ செல்வி பி. நந்தினி — வேலாயுதம் மகாவித்தியாலயம்.

இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் தங்கள் வசமுள்ள பாடசாலைப் பொறுப்பையும் ஆவணங்களையும் உரிய முறையில் கையளித்த பின்னரே இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலைக்குச் செல்லவேண்டுமென யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பணித்துள்ளார்.

(ஐ-118)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 18

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் நலன் விரும்பிகளுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் சகல கட்டடத் திருத்த வேலைகளுடன் மேலும் பல அபிவிருத்தி முயற்சிகளுக்கு உதவ ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன் வந்ததையடுத்தே இந்நிறுவன அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-8)

யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நட்த்தப்பட இருக்கும்

## உதவிப் பதிவாளர் / உதவி நிதியாளர்

பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை

( வெளிவாரி )

மேற்படி போட்டிப் பரீட்சை 1998 — 09 — 19 ஆம் திகதி காலை 8-00 மணிக்கு ( புதிய நேரம் ) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

தகைமையுடைய விண்ணப்பதாரிகள் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.

— பதிவாளர்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1998 90—17

[C/4916]

## கேள்வி அறிவித்தல்

### வலி. தெற்கு பிரதேச செயலகம், உடுவில்

### கட்டட புனரமைப்பு வேலை

கீழ்க் குறிப்பிடும் வேலைக்கான கேள்விகள் உடுவில் பிரதேச செயலக கேள்விச் சபைத் தலைவரினால் 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 01 ஆம் திகதி முற்பகல் 10-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 11-30 மணிக்கு கேள்விச்சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமூகம் அளிக்கலாம்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கான தரம் 8 (எட்டு) அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்குமுன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை வலி. தெற்கு பிரதேச செயலகத்தில் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிவரை சாதாரண வேலை நாள்களில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ள கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.

மேலதிக விவரங்களை பிரதேச செயலகத்தின் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம்: | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 38' X 24' அளவுடைய மகாநாட்டு மண்டபம் அமைத்தல் | 250/- (இருநூற்றைம்பது) | 5,000/- |
| 12' X 10' அளவுடைய இரு அலுவலகக் கூடு அமைத்தல் | 250/- (இருநூற்றைம்பது) | 1,000/- |

ஆ. மகாலிங்கம்
பிரதேச செயலக
கேள்விச்சபைத் தலைவரும்,
பிரதேச செயலாளரும்.

வலி. தெற்கு,
பிரதேச செயலகம்,
உடுவில்.

(இ/4908)

## வெள்ளிவிழாச் சிறப்பு

### சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின்

வெள்ளிவிழா கண்டு நிற்கும் பின்வரும் பணியாளர்களுக்கு சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் அவர்களின் தலைமையில் இன்று நடைபெறும் கௌரவிப்பில் யாழ். கூ. அ. உ. ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் அவர்கள் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிப்பார்,

### வெள்ளி விழா கண்டு நிற்போர்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ந. சிவலிங்கம் | 22. | திரு. ச. இராசரத்தினம் |
| 2. | திரு. க. மகாதேவன் | 23. | திரு. நா. முருகையா |
| 3. | திரு. ச. அரியராசா | 24. | திருமதி க. சிவசுப்பிரமணியம் |
| 4. | திருமதி ப. உருத்திரன் | 25. | திருமதி த. கதிரவேல் |
| 5. | திரு. க. சிவரத்தினம் | 26. | திரு. க. விசுவநாதன் |
| 6. | திரு. க. சிவலோகநாதன் | 27. | திரு. இ. கென்றிக்கப்பர் |
| 7. | திரு. சி. சர்வானந்தன் | 28. | திரு. க. வேதநாயகம் |
| 8. | திரு. சி. விநாயகமூர்த்தி | 29. | திரு. க. கோவிந்தசாமி |
| 9. | திரு. வே. நவரத்தினம் | 30. | திரு. இ. தில்லைநடராசா |
| 10. | திரு. வே. வி. கதிர்காமநாதன் | 31. | திரு. சி. விவேகானந்தன் |
| 11. | திரு. பொ. கமலநாதன் | 32. | திரு. இ. செல்வநாயகம் |
| 12. | திரு. க. பாலகிருஷ்ணன் | 33. | திரு. க. சுப்பிரமணியம் |
| 13. | திரு. த. பத்மநாதன் | 34. | திரு. இ. கந்தசாமி |
| 14. | திரு. மு. சிவசுப்பிரமணியம் | 35. | திரு. கு. சண்முகநாதன் |
| 15. | திரு. இ. சிவானந்தன் | 36. | திரு. செ. கதிரித்தம்பி |
| 16. | திருமதி ம. சரவணமுத்து | 37. | திரு. வை. புவனேந்திரன் |
| 17. | திரு. ச. மகாதேவன் | 38. | திரு. வே. சுபாஸ்சந்திரன் |
| 18. | திரு. க. அருமைத்துரை | 39. | திரு. க. சிவசுப்பிரமணியம் |
| 19. | திரு. இ. இராஜேஸ்வரன் | 40. | திரு. பொ. அம்பிகைபாகன் |
| 20. | திரு. இ. விவேகானந்தன் | 41. | திரு. இ. வீரசிங்கம் |
| 21. | திரு. வ. பேரின்பநாயகம் | | |

கூட்டுறவுக்கு மகத்தான சேவைபுரிந்த இவர்களை வாழ்த்துகின்றோம்.

தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
17 - 09 - 98

(சி-4917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், செப்: 18

கல்வியங்காட்டில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து சென்ற நெடுந்தீவைச் சேர்ந்த தனிநாயகம் விநாயகமூர்த்தி (வயது 36) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் யாழ். மாவட்டம் புறக்கணிப்பு!

## பாதிக்கப்பட்டோர் கவலை

சுன்னாகம், செப்: 18

பிரதேச செயலர் பிரிவு வேறுபாட்டால் நியமனம் மறுக்கப்பட்டவர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வருவதாகவும் —

இந்நியமனத்தில் யாழ். மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் —

'வதிவிட வேறுபாட்டால் பாதிக்கப்பட்டோர் சங்கம்' கவலை தெரிவித்து உள்ளது.

கல்விச் சேவை சேவை ஆணைக்குழு மாவட்ட அடிப்படையில் நியமனம் வழங்கும் முகமாக வெளியிட்ட அறிவித்தலில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் பெயர்கள் தான் வெளியிடப்பட்டதாகவும் —

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மௌனம் சாதித்து வருவதாகவும் —

மேற்படி சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

நிலைமையை ஆராயுமுகமாக தமது செயற்குழு கூடி முடிவுகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ 27)

## விளையாட்டு நிகழ்வு

தென்மராட்சி, செப்: 18

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் சாவகச்சேரி இந்துவும் கைதடி குமாரசாமி ம. வியும் பங்கு பற்றும். (இ-117)

## உயர் தொழில் நுட்ப பரீட்சை அனுமதி அட்டை

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக உள்ள இறுதிப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளையும் நேர அட்டவணையினையும் நாளை முதல் யாழ். உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அதன் இயக்குநர் அறிவித்துள்ளார்.

தேசியஆங்கில டிப்ளோமா (என். டி. ஈ), இரண்டாம் வருடம் வியாபாரக் கற்கையிலான தேசிய டிப்ளோமா (என். டி. பி. எஸ்), இரண்டாம் வருடம் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச். என். டி. ஏ) நான்காம் வருடம் ஆகிய கற்கை நெறிகளுக்கே 21 ஆம் திகதி பரீட்சைகள் நடைபெற உள்ளன. (ஐ-9)

## யாழ். பஸ் நிலையப் பகுதியில் மலசலகூடக்குழி அடிக்கடி நிறைவதால் துர்நாற்றம்

திருநெல்வேலி, செப்: 18

யாழ். மத்திய பஸ் நிலையத்திலுள்ள பொதுசன மலகூடத்தின் கதவு சேதமடைந்துள்ளதால் பிரயாணிகளும் பஸ் நிலைய ஊழியர்களும் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டி உள்ளது.

இம் மலசல கூடத்தின் கிடங்கு மிகவும் சிறியதாக நிறுவப்பட்டதால் அடிக்கடி நிரம்பி விடுவதாகவும். இதனால் மூன்று நாள்களுக்கு ஒரு முறை அழுக்கை வெளியேற்றவேண்டியிருப்பதாகவும் தெரியவருகின்றது. இதனால் இப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் கூறப்படுகின்றது. (ஐ-135)


## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

மேற்படி கழகத்தினால் 20-09-98 அன்று வரணி மகா வித்தியாலயத்தில் நடத்தவிருந்த இலவச மருத்துவ சிகிச்சை முகாம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் 05-10-1998 பூரணை தினத்தன்று நடைபெறும் என அறியத்தருகின்றேன்.

லயன் அ.பொ. செல்லையா
செயலாளர்.

(சி/4923)


## பாதுகாவலர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 18

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கப் பணிமனையில் ப. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-8)

## சீரடி பாபா சரித்திரம் படிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா சமிததியில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சீரடி பாபா சரித்திரப்படிப்பு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 7 நாள்களுக்கு காலை 8. 30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சரித்திரப்படிப்பு இடம்பெறும்.

இறுதி நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி சீரடி பாபாவின் பிறந்த நாள் கொண்டாடப்படவுள்ளது. (ஐ)

## கும்பாபிஷேக நிகழ்ச்சி தொகுப்பு

சாவகச்சேரி கற்குழி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சிகளின் தொகுப்பு நாளை மறுதினம் ஞாயிறு காலை 6 மணிமுதல் 6.30 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவையில் ஒலிபரப்பாகவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையைச் சேர்ந்த ரீ. உருத்திராபதி இந் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார். (ஐ)


## வெளிவந்துவிட்டது!

# - சுந்தரன் -

5ஆவது இதழ் ( 15 ஆவணி – புரட்டாதி )

(சி/4921)


## மருத்துவ பரிசோதனை

வலிகாமம் தெற்கு, செப். 18

நீரிழிவு நோயைக்கண்டறிவதற்கான சிறுநீர்ப் பரிசோதனை இரத்த அழுக்கப் பரிசோதனை ஆகியவற்றை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

நாளை சனிக்கிழமை வைத்திய கலாநிதி எம். சந்திரசேகரத்தினால் சுன்னாகம் மத்திய மருந்தகத்தில் வைத்து மேற்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-152)

★ ★ ★

தென்மராட்சி, செப். 18

மீசாலை, வரணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாமை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரணி மகாவித்தியாலயத்தில் கண், இரத்த அழுக்கம், வாய்ப்புற்று, தொழுநோய், நீரிழிவு, பொதுமருத்துவம் ஆகியவற்றுக்கான மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

இப்பரிசோதனைகளில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் தத்தமது பகுதிக்கிராம சேவகர்களிடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்துள்ளார். (ஐ-117)

## மிதிவெடியில் காயம்

யாழ்ப்பாணம், செப். 18

அளவெட்டிப் பகுதியில் விறகு பொறுக்கச் சென்றவர் நேற்று நண்பகல் அளவில் மிதிவெடியில்சிக்கினார். இதனால் வலது காலின் முழங்காலுக்குகீழ்ப் பகுதியை அவர் இழந்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த கே. குணரத்தினம் (37வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (ஐ-139-15)


## தேசிய போலியோ தடுப்புத் தினம்

தீவக மக்களுக்கொரு வேண்டுகோள்!

தங்கள் 5 வயதிற்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளுக்கும் போலியோ சொட்டு மருந்தைத் தவறாது கொடுத்து, தங்கள் வாரிசுகளின் சுக வாழ்வை உறுதிப்படுத்துங்கள்

மருந்து கொடுக்கும் தினங்கள்:

**19-09-98 சனி - 24-10-98 சனி**

மருந்து கொடுக்கப்படும் நிலையங்கள்:

01. காரைநகர் அரசினர் வைத்தியசாலை.
02. ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை
03. வேலணை அரசினர் வைத்தியசாலை.
04. வேலணை நடராஜா வித்தியாலயம்.
05. புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை.
06. நயினாதீவு அரசினர் வைத்தியசாலை.
07. அனலைதீவு அரசினர் வைத்தியசாலை.
08. நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலை.
09. நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலையம்.
10. எழுவைதீவு சுகாதார நிலையம்.
11. அல்லைப்பிட்டி பாரதி வித்தியாலயம்.

மறவாதீர்! நாளை சனிக்கிழமை 19-09-98 அன்று முதலாவது சொட்டு மருந்து வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்

(சி/4920)


## 'டேர்க்கி' கிண்ண கிரிக்கெட்போட்டி

'ஈஸ்ற் வெஸ்ற்' மார்க்கட்டிங் பிரைவேட் லிமிடெட் ஆதரவில் யாழ். மாவட்ட கிறிக்கெட் சங்கம் நடத்தும் 'டேர்க்கி' வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது வார ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பரணக் கல்லூரி மைதானத்தில-ஜொனியன்ஸ் அணியை- எதிர்த்து சென்றலைட்ஸ் அணியும்—

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்- ஸ்ரான்லி விளையாட்டு கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

இப்போட்டிகளுக்குச் செல்வதற்காக விளையாட்டு வீரர்களுக்கும் ரசிகர்களுக்குமான இலவச பஸ் சேவை நாளை காலை 8.30 மணிக்கு யாழ். கொமாஷல் வங்கிக்கு முன்பாக இருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி போட்டித்தொடரில் நாளை மறுதினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியும் கொக்குவில் 'ஏ' அணியும் மோதவுள்ளன. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் பற்றீசியன் அணியைஎதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதும். சுன்னாகத்தில் நடைபெறும் போட்டிக்கும் இலவச பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பரிசுத் தினம்

பருத்தித்துறை, செப். 18

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய பரிசுத்தினம் நாளை சனிக்கிழமை பி. பகல் 1. 00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. துரை எங்கரசு தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கோப்பாய்க் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக தம்பாலை கிராம சேவை அலுவலர் பூ. சாந்தரூபனும், இருபாலை தெற்கு கிராம சேவை அலுவலர் க. நாகேந்திரனும் கலந்து கொள்வர். (ஐ-118)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 18

வட்டுக்கோட்டை மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தின் ஆதரவில் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் க. செல்வராசா கருத்துரை வழங்குவார். (ஐ)

## சமய சந்நிதியில்

அச்சுவேலி, செப். 18

பத்தமேனி மிட்டிலய கூடல் அம்பலவாண விநாயகர் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். இரவு விசேட உற்சவமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ-11)

★ ★ ★

மட்டுவில் தெற்கு மகா விஷ்ணு (கண்ணன்) ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி இன்று வெள்ளி பி. ப. 2 மணிக்கு கண்ணன் வெண்ணெய் திருடும் உற்சவம் நடைபெற்று சுவாமி தெருவீதிஉலா இடம்பெறும். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் இளைஞனின் சடலம்
# உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட சடலம், நேற்று நடைபெற்ற பிரேத பரிசோதனையை அடுத்து குடும்பத்தவரிடம் கையளிக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு இதற்கான உத்தரவை விடுத்தார்.

நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற முதலியார் சதட்சணாமூர்த்தி சகிதம் சென்ற நீதிவான் சவச்சாலையில் வைத்து இறந்தவரின் உடலைப் பார்வையிட்டார்.

இறந்தவரின் இடது பக்க வயிற்றிலும், இரு தொடைகளிலும் அடிகாயங்கள் காணப்படுகின்றன. இச்சடலத்தை பார்வையிட்ட நீதிவான் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை மூலம் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறுபணிப்புரைவழங்கினார்.

இறந்தவருடன் கைது செய்யப்பட்டு அடிகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வரும் ஆறு சந்தேகநபர்களையும் நீதிவான் நேரில் சென்று சந்தித்தார்.

ஆறு சந்தேக நபர்களும் கைவிலங்கு இடப்பட்ட நிலையில் சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் சிகிச்சை பெறுகின்றனர்.

இவர்களை நேரில் சந்தித்து உரையாடிய பின் காயங்கள் மாறும் வரை தகுந்த சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறி மேல் விசாரணையை இம் மாதம் 25 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் சரவணமுத்து உதயகுமார் (வயது 35) என்பவரே இறந்தவராவார். (139-15-5)

தமிழர்

## கண்டபடி கைதாவதை தவிர்க்க தகவல் நிலையம்

### கொழும்பில் நிறுவ ஏற்பாடு

கொழும்பு, செப். 18

கொழும்பில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கும் கைதானோர் தொடர்பான விவரங்களைச் சீராகப்பேணுவதற்கும் 'தகவல் சேகரிப்பு நிலையங்கள்' (Data Bases) அமைக்கப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில் நீதி, அரசமைப்பு விவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பின் பல பகுதிகளிலும் பாதுகாப்பின் நிமித்தம் தமிழர்கள் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். ஒரு தடவை கைதானவர் மீண்டும் மீண்டும் கைதாகும் நிலைமையும் ஏற்படுகிறது. இது தொடர்பாக பல தரப்பினரிடம் இருந்தும் முறைப்பாடுகள் வருகின்றன.

ஆள்கள் கைதாவதில் முறைகேடுகளையும், குளறுபடிகளையும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் தவிர்ப்பதற்காகவே இந்த தகவல் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. கைதாவோர் பற்றிய தரவுகள் இந்நிலையங்களில் கணனிகள் மூலம் பேணப்படும்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் இந்த நிலையங்களில் கணனி மூலம் சேகரிக்கப்படும். கைதான ஒருவர் பற்றிய தகவலை உறவினர்கள் இந்த நிலையத்தின் மூலம் உடனடியாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும். ஒருவர் ஏற்கனவே கைதானவரா என்பதை இதன் மூலம் உடனடியாகத் தெரிந்துகொள்ள முடியும். இதனால் வீண்சிரமங்களைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

முதலில் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மருதானை ஆகிய மூன்று இடங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்படும். பின்னர் தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்த நிலையங்களை அமைப்பது தொடர்பாக பொலீஸ்மா அதிபருடனும் கொழும்பில் உள்ள தமிழ் பிரமுகர்களுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## காங்கேசனில் உள்ள 12 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பன்னிரண்டு பேரின் பெயர் விவரங்கள் காங்கேசன்துறை இராணுவத்தினரால் யாழ். நீதிமன்றத்துக்கு அனுப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் முதல் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ கணபதிப்பிள்ளை சுந்தரராசன் - நெடுந்தீவு (ஜூலை 28, யாழ்ப்பாணத்தில் கைது).

★ பசுபதி கேதீஸ்வரன் - நெடுந்தீவு (ஜூலை 28, யாழ்ப்பாணத்தில் கைது).

★ சுப்பன் தர்மலிங்கம் - நெல்லியடி (ஜூலை 31, கரவெட்டியில் கைது).

★ கிட்ணன் மகேசன் - உடுப்பிட்டு (ஜூலை 31, இமையாணனில் கைது).

ஆழ்வார் வன்னியசிங்கம் - கரவெட்டி (ஜூலை 31, கரவெட்டியில் கைது).

★ நகுலேஸ்வரி வீரபத்திரன்.

★ ரஜிதா வீரபத்திரன்

★ சுகிர்தா வீரபத்திரன்—இவர்கள் மூவரும் அல்வாய் தெற்கைச் சேர்ந்தவர்கள் (ஜூலை 31, அல்வாயில் கைது).

★ சிவராசா கணநாதன் - பொன்னாலை (ஜூலை 18, சுன்னாகத்தில் கைது).

★ நாகன் பாலசிங்கம் - கரவெட்டி (ஓகஸ்ட் 23, அல்வாயில் கைது)

★ ஜெயரஜனி பாலசிங்கம் - கரவெட்டி (ஓகஸ்ட் 23, அல்வாயில் கைது).

★ பரணபாஸ் தோமஸ் மோர்- யாழ்ப்பாணம் (செப்டெம்பர் 2, வேலணையில் கைது).

(இ-9)

## தெஹிவளை தபாலகத்தில் புதைகுழியில் குண்டுகள்?

அண்மையில் ரகசியப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்த தகவல்களை அடுத்து தெஹிவளை அஞ்சலகக் காணியில் புதைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் குண்டுகளைக் கண்டுபிடிக்கும் நோக்கில் கடந்த செவ்வாய் நள்ளிரவில் இருந்து தோண்டும் பணிகள் நடைபெற்று வருவதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த அதிகாரி ஒருவரால் இந்தக் குண்டுகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என தகவல்கள் கிடைத்துள்ளதாக ரகசியப் பொலீசார் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

### ஆவணங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலகல்ல இதற்கான அனுமதியைவழங்கிய பின்னரே ஆவணங்கள் மீட்புப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பின் போது மாநகரசபை வளவின் வாகன பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த தமது மோட்டார் சைக்கிள்கள், போன்ற வாகனங்களை மாநகரசபை ஊழியர்கள் நேற்று எடுத்துச் சென்றனர் ஆவணங்களை மீட்கும் நடவடிக்கையில் த. வி. கூட்டணி, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ் போன்ற தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களும் மாநகரசபை ஊழியர்களுக்கு உதவியதாகத் தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இக் கட்டடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் இக்கட்டடம் படையினரின் பாதுகாப்பில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-173-15-5)

### படையினர் - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வக்கோன் இதனைத் தெரிவித்தார்.

இம்மோதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 5 பேர் உயிரிழந்ததாகவும்—

பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின் போது 127 மிதிவெடிகள் இப்பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர் )

இன்றும்நாளையும்அமைதி பேணுவது போன்று இரண்டாவது கட்ட போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் நாளையொட்டி ஒக்டோபர் 23 ஆம் 24 ஆம் திகதிகளிலும் அமைதி பேண விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் — சொட்டு மருந்து வழங்கும் வைபவத்தில் பங்கு கொள்ள வரும் ஐ. நா. அதிகாரிகள் நாளை காலை சாவகச்சேரியில் சொட்டு மருந்து வழங்கி இந்த நிகழ்வை ஆரம்பித்து வைப்பர். அதன் பின்னர் குடாநாட்டில் இந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வர். (இ-3-117)

### நேற்றைய...

(முதலாம் பக்கம் தொடர்)

உறுப்பினர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களும் அமைச்சின் செயலாளரும், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் பங்குபற்றினர்.

ஆரம்பத்தில் டக்ளஸ் தேவானந்தா பேசுகையில் "இரு பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. இலியாஸ் தொடர்பானது. மற்றையது எம். பிக்களான இராமமூர்த்தி, இராமேஸ்வரன் ஆகியோர் தொடர்பானது.

இலியாஸ் தொடர்பான பிரச்சினை பற்றி நாம் பேசத் தயார். முஸ்லிம் காங்கிரஸ்—ஈ. பி. டி. பி. என்று பாராமல் அவரது பிரச்சினை பற்றி பேசுவோம்.

இரண்டாவது பிரச்சினை எமது கட்சியின் உள்பிரச்சினையாகும் என்றார்.

இலியாஸ் தொடர்பாக மக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் வந்ததால் அவருக்கு நிதிஒதுக்க வில்லை என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

இதையடுத்து அமைச்சர் தெரிவித்த பல கருத்துக்களையடுத்து இலியாஸின் பிரச்சினை தொடர்பாக தமது மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக டக்ளஸ் தெரிவித்தார்.

இராமமூர்த்தி. இராமேஸ்வரன் ஆகியோரின்பிரச்சினை தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்ததீர்ப்பை எடுத்து விளக்கி அவர்கள் தொடர்பான பிரச்சினை உள்கட்சி விடயம் என்று டக்ளஸ் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் அது தொடர்பாகப் பேசவில்லை என்றுதெரிவிக்கப்பட்டது

(மேலும் செய்திகள் பக்கம் 5இல்) (இ-3-21)

### விமான...

(முதலாம் பக்கத் தொடர்)

கொள்ள தற்போது உள்ள ஒரே ஒரு போக்குவரத்து மார்க்கம் விமானச் சேவை ஆகும். தற்போது மொனறா, லயன்எயார் விமானச்சேவைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவைகளுக்கு விடப்பட்டுள்ள அச்சுறுத்தல் யாழ். பொதுமக்களின் நலன்களுக்கு விரோதமானதாகும். வேலை, கல்வி மற்றும் உற்றார், உறவினர்களின் மரணச்சடங்குகள் ஆகியவற்றுக்கும் அவசர வைத்திய தேவைகள் மற்றும் எண்ணிறந்த தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் இந்த மார்க்கத்தைத் தடைசெய்வது நியாயமற்ற நடவடிக்கை ஆகும்.

அதுவும் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்பவர்கள் இவ்வாறு தடை விதித்திருப்பது முரண்பாடான நடவடிக்கையே.

விமானச் சேவை இராணுவத்தினருக்குச் சாதகமானது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத வாதம். இங்குபாதிக்கப்பட்டிருப்பது மக்களின் ஜீவாதார நலனே.

விமானத் தாக்குதலுக்குள்ளாகி அதில் மக்கள் அழிந்தால், அதற்கு விமானச் சேவை முகவர்களே பாத்திரவாளிகள்; அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவிக்க வேண்டி வரும் என்று விமானச் சேவை முகவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது நியாயமானதல்ல. இதுநாளாந்தம் பயணம்செய்யும் பலநூறு தமிழ் மக்களின் உயிருடன் நடத்தும் பொறுப்பற்ற விளையாட்டாகும்.

இந்த மக்கள் பற்றிய பொறுப்புணர்வற்ற தான்தோன்றித்தனமான போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் —

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கஸ்தூரியார் வீதி திருட்டில் நால்வர் கைது

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக நால்வர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகளில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாகவும்—

அவர்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

## கப்பலில் தபால் பொதிகள்

கடந்த செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை வந்த 'லங்கா முடித்த' கப்பலில் 249 தபால்பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. என்று தபால் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (இ-3)

### மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்)

பற்றி ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ். மாநகர சபையில் தற்பொழுது ஆயிரத்து 200 ஊழியர்கள் வரை கடமையாற்றி வருகின்றார்கள். குண்டு வெடிப்புடன் இவர்களில் எவருக்காவது தொடர்பு இருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரிலே விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது. (இ-173-5)

### யாழ். மாநகர...

(முதலாம் பக்கம் தொடர்)

டணியைச் சேர்ந்த பலர் முதல்வர் பதவியை ஏற்க முன்வந்துள்ளனர். தேவை ஏற்பட்டால் முதல்வர் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாக கட்சியின் துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரியே கூறியுள்ளதாகத் தெரிகிறது. எனவே குண்டு வெடிப்பினால் யாழ். மாநகர சபையின் எதிர்காலப் பணிகள் பாதிக்கப்படும் எனக் கருதமுடியாது என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். (ஐ)

### சிறுமியரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தம்மிடம் நகைகளைப் பறித்த யுவதிகள் ஒரே விதமான உடை (வெள்ளை ஸ்கேர்ட்) அணிந்து சைக்கிளில் வந்ததாகச் சிறுமிகள் தெரிவிக்கின்றனர்.

நகைகளைப்பறிகொடுத்த சிறுமிகளில் இருவர் ரியூஷன் முடிவடைந்த பின்னர் பிறந்த நாள் வைபவம் ஒன்றுக்குச் செல்வதற்காக பெறுமதி மிக்க நகைகளை அணிந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நாவலர்வீதிஊடாக இந்த மூன்று சிறுமிகளும் ரியூஷனுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் பின் தொடர்ந்து வந்த பிரஸ்தாப மூன்று யுவதிகளும் இலுப்பையடிச் சந்திக்கு சமீபமாக வைத்து சிறுமிகளை மறித்ததாகவும்—

இலுப்பையடிச் சந்தி ஊடாக செல்ல படையினர் தடுப்பதால் எல்லோரும் அன்னசத்திரம் வீதி ஊடாகவே செல்வதாக சிறுமிகளிடம் யுவதிகள் தெரிவித்ததாகவும்— கூறப்படுகிறது.

இதை நம்பி அன்னசத்திரம் வீதியூடாக சிறுமிகள் மூவரும் சென்ற போது பின் தொடர்ந்து வந்த யுவதிகள் மூவரும் திடீரென சிறுமிகளை வழி மறித்து கத்தியைக் காட்டி பயமுறுத்தி நகைகளைத் தருமாறு கேட்டதாகவும் —

சிறுமிகள் மறுக்கவே சிறுமிகளைத் தாக்கி விட்டு நகைகளை அபகரித்துக்கொண்டு சைக்கிள்களில் தப்பிச் சென்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org